வாசிக்க: ஆதியாகமம் 39:1-12

***"இயேசுவானவர் ஞானத்திலும், உடல் வளர்ச்சியிலும், தேவ கிருபையிலும், மனிதர் தயவிலும் அதிகமதிகமாய்ப் பெருகினார்" (லூக் 2:52)***

தமது ஆசீர்வாதத்தை இந்த உலகிற்கு எடுத்துச் செல்லும் வாய்க்கால்களாய்ப் பயன்படக்கூடிய வாலிபரைக் கடவுள் தேடியலைகிறார். அருமைத் தம்பியே, தங்கையே, நீ முன்வருவாயா ?

★ தங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து க டைசிவரை அவர்களுக்குச் செய்யவேண்டிய கடமையை நிறைவேற்றும் **இயேசு** போன்ற வாலிபர் தேவை! (லூக் 2:51; யோ 19:25-27)

★ பாலினப் பாவங்களுக்கு மறுப்பு தெரிவித்து தீய சோதனைக்குக் காரணமான நபரையும்விட்டே ஓடிவிடும் **யோசேப்பு** போன்ற வாலிபர் தேவை! (ஆதி 39:10-12)

★ தீயதாய்க் காணப்படும் அத்தனையையும் விட்டு விலகும் **தீமோத்தேயு** போன்ற வாலிபர் தேவை! (1 தீமோ 5:23)

★ தேவனது திட்டங்களும் தீர்மானங்களும் நிறைவேறப் பக்தியுள்ள தங்கள் பெற்றோரோடு ஒத்துழைக்கும் **ஈசாக்கு** போன்ற வாலிபர் தேவை! (ஆதி 22:6,9-14)

★ திருமறைக்கு அடிமையாகி தன் வாழ்க்கை முறையைத் திருவசனத்திற்கேற்ப அமைத்துக்கொள்ளும் **தீமோத்தேயு** போன்ற வாலிபர் தேவை! (2 தீமோ 3:15)

★ கேலியும் பயமுறுத்தலும் நிறைந்திருந்தாலும் கிறிஸ்துவுக்காய்த் தைரியமாய்ச் சாட்சி பகரும் **பவுல்** போன்ற வாலிபர் தேவை! (அப் 9:29)

★ அதிகாரிகளின் தயவை இழக்க நேர்ந்தாலும் தங்கள் விசுவாசத்தில் சமரசம் பண்ண மறுக்கும் **தானியேல்** போன்ற வாலிபர் தேவை! (தானி 6:10,11,16)

★ முதியோருக்கும் தலைவர்களுக்கும் கீழ்ப்படிந்து அவர்களது மாதிரியைப் பின்பற்றிக் கடவுள் தங்களை உயர்த்தும் வேளைக்காகக் காத்திருக்கும் **யோசுவா** போன்ற வாலிபர் தேவை! (யாத் 24:13; எண் 27:18-20)

★ மாய்மாலத்தையும் குப்பைகூளங்களையும் கடவுளின் வீட்டிலிருந்து வெளியே தூக்கியெறிய அப்போஸ்தலர் 5இலுள்ளது போன்ற **வாலிபர்** தேவை! (வச 6,9,10).

★ விஞ்ஞான உலகின் அசட்டையையும், பின்வாங்கின சபையின் உற்சாகமிழக்கச் செய்யும் வார்த்தைகளையும் கவனியாது கடவுளுக்காய்ப் பெரிய காரியங்களைச் செய்யத் துடிக்கும் **தாவீது** போன்ற வாலிபர் தேவை! (1 சாமு 17:28,33,43,44)

★ கடவுள் அழைத்தவுடன் தங்கள் அலுவல்களை விட்டுவிட்டு முழுநேரமாய் அவருக்குப் பணியாற்றப் புறப்பட்டுச்செல்ல **யாக்கோபு, யோவான்** போன்ற வாலிபர் தேவை! (மத் 4:21,22)

★ தியாகம் செய்ய வேண்டியதிருந்தாலும், அது தேவையிலுள்ளோருக்கு ஆசீர்வாதமாகப் பயன்படக்கூடுமானால், எதையும் கடவுளுக்குக் கொடுத்துவிட ஆயத்தமாயிருக்கும் பெயர் சொல்லப்படாத **குட்டித்தம்பி** போன்ற வாலிபர் தேவை! (யோ 6:9-12)

**HAPPY CHILDREN'S DAY!**